(இ) *அச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செயற்படும் பொருட்டு, சிலாபம் விலங்கு மருத்துவ புலனாய்வு உத்தியோகத்தரை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

(ஈ) *அச்சட்டத்தின் 3 (2), 5 (4), 12(1) மற்றும் 12 (2) ஆகிய பிரிவுகளினால் மிருக வைத்தியரொருவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் தத்துவங்களையும், நோய்த்தொற்றுப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசமொன்றினுள் ஆற்றி முடிக்கவும், பிரயோகிக்கவும் பொருட்டு, வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் சகல அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகளுக்கும் அதிகாரமளிக்கின்றேன்.*

(உ) *அச்சட்டத்தின் 9 ஆம் மற்றும் 11 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் ஒவ்வொரு அரசாங்க மிருக வைத்திய அதிகாரியையும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாகவும் இத்தால் பிரகடன்ப்படுத்துகின்றேன்.*

*3. இக்கட்டளையானது, 2014.02.13 ஆந் திகதிய 1489/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமானதாகும்.*

*(டாக்டர்) டபிள்யூ. கே. த சில்வா,*
*பணிப்பாளர் நாயகம்,*
*கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.*

*3- 504*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*